

பேறறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தையொட்டி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக சார்பாக, மாவட்ட செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் ஓசூர் ராம்நகரிலிருந்து அமைதி ஊர்வலம் சென்று, ஓசூர் தாலுகா அலுவலகம் அருகில் உள்ள பேறறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி மாலை அணிவித்து, மௌன அஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், ஓசூர் மாநகர மேயர் சத்யா, மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ், மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன், துணை மேயர் ஆனந்தய்யா, மாவட்ட பொருளாளர் சுகுமாரன் உள்ளிட்ட நிர்வாகிகள், கழக தோழர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தென்னகத்தின் பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் அமைச்சர் சு.முத்துசாமி முகாம் அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனை தொடர்ந்து தெற்கு மாவட்ட அலுவலகத்திலும், பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள முழு திருவுருவ சிலைக்கும் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் அந்தியூர் ப.செல்வராசு, கந்தசாமி வி.சி.சந்திரகுமார், எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், குறிஞ்சி என். சிவகுமார், வீரமணி ஜெயக்குமார், வே.செல்வராஜ், ஆ.செந்தில்குமார், ப.க.பழனிசாமி, ஜெ.திருவாசகம் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# உயர்கல்வியின் கிரீடமாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்கிறது!

## அமைச்சர் முனைவர் கோவி. செழியன் பெருமிதம்!



சென்னை,பிப்.6-

நேற்று முன்தினம் (05.02 .2026) சென்னை, அண்ணா பல்கலைக்கழக விவேகானந்தா அரங்கில் நடைபெற்ற அண்ணா பல்கலைக் கழக கிண்டி பொறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் 841 மாணாக்கர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

இப்பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது:-

உயர்தர தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதில் அண்ணா பல்கலைக்கழகம் ஒரு சிறந்த பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது. மேலும், இது நாட்டின் பழமையான தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது. அண்ணா பல்கலைக்கழக கிண்டி பொறியியல் கல்லூரி 1794ஆம் ஆண்டு நிறுவப்பட்ட உலகின் மிகப் பழமையான நிறுவனங்களில் ஒன்றாகும். 4 பல்கலைக்கழகத் துறைகள், 16 தொகுதிக் கல்லூரிகள் மற்றும் 476 இணைப்புக் கல்லூரிகளை உள்ளடக்கியது.

மேலும், கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி (எம்.ஐ.டி) மற்றும் SAP வளாகங்களில் உள்ள 36 துறைகளால் 32 இளங்கலை மற்றும் 88 முதுகலை படிப்புகள் வழங்கப்படுகின்றன. கிண்டி பொறியியல் கல்லூரியில் 1,876 மாணாக்கர்கள் பயில்கின்றனர். அழகப்பா தொழில்நுட்ப கல்லூரியில் 516 மாணாக்கர்கள் பயில்கின்றனர். கட்டட கலை மற்றும் திட்டமிடல் பள்ளியில் 102 மாணாக்கர்கள் பயில்கின்றனர். மெட்ராஸ் தொழில்நுட்ப கழகத்தில் 894 மாணாக்கர்கள் பயில்கின்றனர்.

உலகளவில் 2026ஆம் ஆண்டுக்கான QS உலகப் பல்கலைக்கழக தரவரிசையில், 465 வது இடம்; இந்தியப் பல்கலைக்கழகங்களில் 10வது இடம். டைம்ஸ் உயர் கல்வியின் (THE) பல் துறை சார்ந்த அறிவியல் தரவரிசை 2025 இல், இந்தியாவில் முதலாவது இடம்; உலகளவில் 42 வது இடம். தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) தரவரிசைப் பட்டியல் 2025 இல் மாநில பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடம். NIRF, புதுமைப் பிரிவில் அண்ணா பல்கலைக்கழகம் 9 வது இடம். ஆராய்ச்சி நிறுவனங்களில் 2 வது இடம். இந்தியாவில் உள்ள பொறியியல் நிறுவனங்களில் 20வது இடம். இவ்வாறு பல்வேறு தரவரிசை பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் முதன்மை இடத்தை பிடித்து, நாட்டின் முதன்மையான பல்கலைக்கழகமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாடு உயர்கல்வியின் கிரீடமாக அண்ணா பல்கலைக்கழகம் திகழ்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

மையப்படுத்தப்பட்ட ஆய்வக வசதிகள், செயற்கை நுண்ணறிவு தளங்கள், மின்னணு-வளங்களை உருவாக்குவதற்கு தமிழ்நாடு அரசு ரூ. 1,380.20 கோடி வழங்கியுள்ளது. 2024-2025 கல்வியாண்டில், அண்ணா பல்கலைக்கழகத்தில் மொத்தம் 1,50,495 மாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர். 584 மாணவர்கள் முன்னணி தொழில்துறை நிறு வனங்களில் பயிற்சி பெற்றனர். பல்கலைக்கழகத்தின் வேலை வாய்ப்புப் பிரிவின் மூலம் 256 உயர்தர நிறுவனங்களில் 1,339 மாணவர்கள் அதிகபட்சமாக ரூ. 53 லட்சம் ஆண்டு ஊதியத்துடன்பணிய மர்த்தப்பட்டுள்ளனர்.

உலகளாவிய வெளிப்பாட்டையும் சர்வதேச அளவில் கல்வித் திறனை மேம்படுத்துவதற்காக, ஜெர்மன், ஜப்பானிய, ஸ்பானிஷ், கொரிய மற்றும் தைவானிய மாண்டரின் மொழிகளில் வெளிநாட்டு மொழிப் படிப்புகள் நடத்தப்படுகின்றன. முதலமைச்சரின் ஆராய்ச்சி மானியத்தின் (CMRG) கீழ், ஆசிரியர்களுக்கு 79 ஆராய்ச்சி திட்டங்களும், மாணவர்களுக்கு 6 ஆராய்ச்சி திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. ஆளில்லா வான் வழி வாகனம் (UAV) மற்றும் கூட்டு காற்றாலைகளின் மறுசுழற்சி ஆகிய இரண்டு திட்டங்களுக்காக ரூ. 18.66 கோடி பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் 220 h-குறியீடு பெற்றுள்ளனர். பல்கலைக்கழகம் தாக்கல் செய்த 89 காப்புரிமைகளில், 69 மானியங்களைப் பெற்றுள்ளது. தேசிய உயர் கல்வித் திட்டம் (RUSA) 2.0 திட்டத்தின் கீழ், மொத்தம் 815 மாணவர்களின் பங்கேற்புடன் 20 உயர்தர திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

மேலும், 35 கோடி நிதிக் கொடையுடன் மின்சார வாகன தொழில்நுட்பங்கள்- சாமர்த்தியமான பொருள் பண்புகள், உற்பத்தி மற்றும் கட்ட மேலாண்மை என்ற தலைப்பில் திட்டம் நடைபெற்று வருகிறது. அண்ணா பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பு மற்றும் ஆய்வக மேம்பாட்டிற்காக, புதிய ஆராய்ச்சி பூங்கா மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்த ரூ. 500 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் கிண்டி பொறியியல் கல்லூரியினை சேர்ந்த 348 பெண்கள் மற்றும் 493 ஆண்கள் என மொத்தம் 841 இளநிலை மாணாக்கர்கள் பட்டம் பெறுகின்றனர்.


2024-25ஆம் கல்வியாண்டில் (அண்ணா பல்கலைக்கழக 4 உறுப்பு கல்லூரிகளையும் சேர்த்து) அரசு திட்டங்கள் மூலம் பயன் பெறுபவர்கள் 1,834 முதல் தலைமுறை பட்டதாரிகள், 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் 619 மாணவர்கள், நான் முதல்வன் திட்டத்தின் கீழ் வருடத்திற்கு 1,05,000 மாணாக்கர்கள் திறன் பயிற்சி பெறுகின்றனர். புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 470 மாணவிகள், தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் 416 மாணவர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் 1,464 மாணாக்கர்களுக்கு ரூ. 6.33 கோடி மதிப்பில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணாக்கர்களுக்கு உதவி தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 1,805 மாணாக்கர்களுக்கு ரூ. 71.90 இலட்சம் மதிப்பில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. முதுகலை பட்டப்படிப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ் 518 மாணாக்கர்களுக்கு ரூ. 3.73 கோடி மதிப்பில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. மடிக்கணினி திட்டத்தின் கீழ் 1,028 மாணாக்கர்கள் பயன் பெறவுள்ளனர்.

மேலும், இன்று பட்டம் பெற்ற மாணாக்கர்கள் தங்களின் பொறுப்பை உணர்ந்து பெற்றோர்களை பெருமைப்படுத்தி வாழ்வில் சாதிக்க என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் பேசினார்.

இப்பட்டமளிப்பு விழாவில் இயக்குநர், இந்தியன் ஆயில் நிறுவனம் மற்றும் மூத்த துணை தலைவர், அசோக் லேலண்ட் மற்றும் புகழ்பெற்ற முன்னாள் மாணவர் - MIT கிருஷ்ணன் சடகோபன், தொழில்நுட்பக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.விசாகன், அண்ணா பல்கலைக்கழக வான்வெளி பொறியியல் துறை உறுப்பினர் மற்றும் உறுப்பினர், கூட்டுநர் குழு, பேரா. பி.டி.என் ஸ்ரீதர், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் (பொ) முனைவர் வி. குமரேசன் மற்றும் தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் (பொ) முனைவர் பெ. சக்திவேல், கிண்டி பொறியியல் கல்லூரி புலமுதல்வர் முனைவர் பி.ஹரிஹரன், அழகப்பா தொழில்நுட்ப கல்லூரி புலமுதல்வர் முனைவர் எஸ். மீனாட்சிசுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## தேரும்.... நானும்!



"அவருக்கு
முதலமைச்சராகும்
யோகம் ஜாதகத்திலேயே
இல்லை என்று
குறி சொன்ன
பலரையும்
கோமாளியாக்கியவர்"..

"ஒருமுறை ஆட்சிக்கு
வந்த பின்
தொடர்ந்து இரண்டாம்
தடவை ஆட்சியை
தக்கவைத்தது இல்லை"
என ஆரூடம்
சொல்பவர்களின்
முகத்தில்
கரி பூசக் காத்திருப்பவர்..

எளிய மக்களின்
மகிழ்வான வாழ்வுக்கு
தன் ஆட்சித் திறத்தால்
அள்ளித் தந்திருக்கும்
அநேகத் திட்டங்கள்..

ஒன்றிய அரசின்
வஞ்சகத்தை
நெஞ்சுரத்தால்
எதிர்கொள்ளும்
துணிவு உறுதி..

அண்ணா மற்றும்
கலைஞரது
அரசியல் அனுபவங்களை
பக்கமிருந்து படித்த
அனுபவம்...

கொள்கை கொண்டு
அமைத்த கூட்டணியை
நெறி சார்ந்து
வழி நடத்தும்
நேர்மை...

எதிரிகள் ஏவும்
கணைகளை
கையில் பிடித்து
காதுகுடையும்

பதறாத பண்பு
கவனம் சிதறாத பக்குவம்..

மக்கள் தன்மீதும்
தான் மக்கள் மீதும்
கொண்டுள்ள
பரஸ்பர நம்பிக்கை..

வெறும் யூகங்களை
மட்டுமே நம்பாது
வியூகங்களால்
வெற்றியை
தொடர்ச்சியாக்கும்
மதிநுட்பம் ..

இப்படி

அன்பாலும்
அரவணைக்கும்
பண்பாலும்
படை நடத்தும்
திறத்தாலும்

பவள விழா கண்ட
இயக்கத்தை
பாரதத்தின்
அரசியலையே
தீர்மானிக்கும்

சரித்திரப்
பெட்டகமாக்குகிறது

முத்துவேல்
கருணாநிதி
ஸ்டாலின் அவர்களது
திராவிடத் தேரோட்டம்
என்றால்..

அதில்

கூட்டத்தில் ஒருவராக
நின்று
வடம் பிடிக்கும் வாய்ப்பு
நமக்கும் என்றால்
அது வாழ்நாள்
பாக்கியம் அல்லவா..



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்குழு துணைத் தலைவர்

### உலகில் எந்த நாடும், எந்த மாநிலமும் செய்திராத வகையில்

# 20 லட்சம் மாணவர்களுக்கு 'லேப்டாப்' வழங்கி கழக அரசு சாதனை!

## சேலத்தில் - ஒன்றிய முன்னாள் அமைச்சர் தயாநிதிமாறன் எம்.பி. பேச்சு!



சேலம், பிப்.7-

சேலத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் சேலம் மேற்கு சட்டமன்ற தொகுதியில். தமிழ்நாடு தலை குனியாது தேர்தல் பரப்புரை கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியதாவது: -

இந்தியாவில் தமிழ்நாடு சிறந்த மாநிலமாக திகழ்ந்து வருகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெகு சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார்

தனக்கு வாக்களிக்காத மக்கள், "நாம் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வாக்களிக்க வில்லையே" என மனம் நோகும் வகையில் மிகச் சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார். பெண்களின் முன்னேற்றம் தான் இந்தியாவின் முன்னேற்றம் என்ற வகையில் மாதந்தோறும் மகளிருக்கான உரிமைத் தொகை ரூ.1,000 வழங்கி வருகிறார்

இந்தத் திட்டம் சாத்தியமில்லை என்று கேலி செய்தனர். ஆனால் அதனை வழங்கி இன்று சாதனை படைத்துள்ளார். 1 கோடியே 30 லட்சம் மகளிர்களுக்கு உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நமது முதலமைச்சரின் திட்டத்தை பா.ஜ.க ஆளும் மாநிலங்களிலும் இத்திட்டம் செயல்படுத்துகிறார்கள்.

உலகில் எந்த நாடும் எந்த மாநிலமும் செய்யாத வகையில் 20 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு லேப்டாப் வழங்கியுள்ளார். இதன் மூலம். அடுத்த தலைமுறையும் முன்னேற வேண்டும் என்பது தான் முதலமைச்சரின் நோக்கமாக இருக்கிறது

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் 5 ஆண்டு ஆட்சியில் கிடைத்த நன்மைகளை பொது மக்கள் தினசரி 10 பேருக்காவது சொல்ல வேண்டும் 2வது முறையாக மு.க. ஸ்டாலி அவர்களின் ஆட்சி மலர வேண்டும்

தமிழ் நாட்டில் பிரிவினையை ஏற்படுத்த முடியாது. உ.பி. அரியானா உள்ளிட்ட வட மாநிலங்களில் மதப்பிரச்சினையை ஏற்படுத்தி பா.ஜ.க.வினர் அறுவடை செய்கிறார்கள் அது தமிழ்நாட்டில் எடுபடாது. நாம் அண்ணன் தம்பி களாகவும் அக்கா தங்கைகள் போல் இருக்கிறோம். இவ்வாறு அவர் பேசினார்



தருமபுரி மேற்கு மாவட்டம்,பாலக்கோடு தொகுதி பெரியாம்பட்டியில் உள்ள தனியார் மண்டபத்தில் முக்கிய பிரமுகர்கள், இளைஞர்கள், மாணவர்கள், தன்னார்வலர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், தொழில்முனைவோர் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோருடனான சந்திப்பு கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர், முனைவர் பெ.பழனியப்பன் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர், கழக கொள்கை பரப்பு செயலாளர் முனைவர். சபாபதிமோகன் ஆகியோர் கலந்துரையாடி அவர்களின் கருத்துகள்,தேவைகள் குறித்து கேட்டறிந்தனர். இக்கூட்டத்தில் கே.மனோகரன், சூடப்பட்டி. சுப்ரமணி, எம்வீடி.கோபால், முனியப்பன், முருகன், பி.கே.முரளி, உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.



தருமபுரியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.30.14 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தை முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார். அதைத்தொடர்ந்து புதிய பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகளை மாவட்ட ஆட்சியர் சதீஸ்,மற்றும் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர்.ஆ.மணி எம்.பி ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர்.உடன் எம்.எல்.ஏக்கள், ஜி.கே. மணி, எஸ்.பி.வெங்கடேஸ்வரன், கோட்டாட்சியர் காயத்ரி, நகர செயலாளர்கள் நாட்டான். மாது,எம்.பி.கௌதம்,டி.என்.சி.மணிவண்ணன், இளங்கோவன் மற்றும் அரசு துறை அதிகாரிகள், தி.மு.க.வினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநில, மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக உடன் பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.